சட்ட விளக்க கோவை:

# அகதி இளைஞர்களிடையே காணப்படும் நிலைமாற்றம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கான கைநூல்.



சட்ட விளக்க கோவை:

# அகதி இளைஞர்களிடையே காணப்படும் நிலைமாற்றம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கான கைநூல்

CASSA

The Law Foundation of Ontario

*Advancing access to justice*

தாராள மனதோடு இந்நிதியனுசரணை வழங்கிய

ஒன்டாரியோ சட்ட நிறுவனத்திற்கு எங்கள் உளமார்ந்த நன்றிகள்.

வெளியீடு : தென்காசிய நிறுவனங்களுக்கான முகவர் சபை

301A – 5200 Finch Avenue East - ஸ்காபுரோ — ஒன்ராரியோ

M1S 4Z5 – தொலைபேசி (416) 932 1359

பதிப்புரிமை ஆடி *2018*— தென்காசிய நிறுவனங்களுக்கான முகவர் சபை பதிப்புரிமை பெற்றது

முதல் பதிப்பு ஆடி *2018*

© இப்பதிப்பை, மீள் பதிப்பு செய்வதோ, அனுப்புவதோ, பிரதியெடுப்பதோ மீள் உருச் செய்தி கணிணியில் பதிவு செய்வதோ, வேறு மொழிகளில் மொழி மாற்றம் செய்வதோ ஆக்குநின் அல்லது CASSA நிறுவனத்தினின் எழுத்து மூல சம்மதத்துடன் பெற வேண்டும். ஒன்ராரியோ சட்ட நிறுவனத்தின் நிதியனுசரனையுடன் உருவான இப்பிரதிமேல் ஆக்கியோனுக்கும் CASSA நிறுவனத்திற்கும் முழு உரிமை உள்ளது. இந்நிதியுதவியின் மூலம் பெறப்பட்ட எல்லா அறிவுசார் தொகுப்புகளுக்கு அத்தொகுப்புக்களை பதிப்புரிமை செய்வதற்கு ( மேலதிக கட்டணமே அல்லது பங்குரிமையோ இல்லாமல்) இந்நிறுவனத்திற்கு உரிமை வழங்கப்படும் அதே நேரத்தில் வணிக ரீதியாக வெளியிடுவோருககெதிராக நடவடிக்கை எடுத்தலும் அவசியமாகின்றது. தாராள மனதோடு இந்நிதியனுசரனை வழங்கிய ஒன்டாரியோ சட்ட நிறுவனத்திற்கு எங்கள் உளமார்ந்த நன்றிகள்.

ISBN: 978-1-9994045-0-5



# எமது நன்றிகள்

இந்நூலாக்கத்திற்கு துணைபுரிந்த அனைத்து தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கும் எமது நன்றிகள்.அத்துடன் ஆலோசனைகள் மற்றும் கலந்துரையாடல்களில் கலந்து கொண்டு தங்கள் விலைமதிக்க முடியாத நேரங்களை செலவிட்ட அனைவருக்கும் எமது நன்றிகள்

இந்நூலை தரமுள்ளதாக்கும் வகையில் சட்ட நுணுக்கங்கள், வளங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்த உதவிய கீழ்காணும் நிறுவனங்களைச் சேர்ந்த சட்ட நிபுணர்கள், மற்றும் எங்கள் பங்குதாரர்களுக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

(நிறுவனங்களின் பெயர்கள் எந்தவித தர அடிப்படையிலும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்)

- Community Legal Education Ontario (CLEO)
- FCJ Refugee Center
- Md Washim Ahmed, Barrister and Solicitor, Legal expert on Refugee Law
- Settlement Assistance and Family Support Services
- South Asian Legal Clinic of Ontario
- The Advocacy Centre for Tenants Ontario
- The Arab Community Centre of Toronto

அத்துடன் எங்கள் நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ஒன்ராரியோ சட்ட நிறுவனத்தின் தாரள நிதிப்பங்களிப்புக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

# அறிமுகம்

இச் சட்டக் கோவையின் நோக்கமானது அகதி இளைஞர்களுக்கு ஒன்ராரியோவில் காணப்படும் அவர்களின் சட்ட உரிமைகளை விளங்கிக் கொள்வதற்காகவும், அத்துடன் அவர்கள் எதிர் நோகும் நிலைமாற்ற பிரச்சனைகளை விளக்கும் கைநூலாகவும் செயற்படுகின்றது.

அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் தரவுகளின்படி, உலகெங்கிலும் ஏறத்தாழ நிமிடத்திற்கு 20 பேராவது வன்முறை மற்றும் தொந்தரவுகளால் கட்டாய இடப் பெயர்வுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இவர்களில் ஏறத்தாழ 22.5 மில்லியன் அகதியாகவும் அவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டவர் 18 வயதுக்கு குறைந்தவர்களாகவும் உள்ளனர். இவ் அகதி இளைஞர்களில் சிறுவர்களே பாலியல் தொந்தரவுகள், பால் நிலை வன்முறைகள், கட்டாய ஆள்சேர்ப்பு, சட்டத்திற்கு முரணான கைதுகள் மற்றும் தடுத்து வைத்தலுக்கும் அதகி அளவில் ஆளாகின்றனர். இந்நிகழ்வுகளின் அடிப்பிடையிலேயே இக் கைநூலின் தயாரிப்பும் இளைஞர்கள் நேரடியாக சட்ட ரீதியாக தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் வகையிலும் இந்நூல் அமைந்துள்ளது.

இச் சட்ட தகவல்களின் அடிப்படையில் அகதி இளைஞர்களுக்கான பல உள்ளீடுகளை

இக்கைநூல் கொண்டுள்ளது. அண்மைக் காலங்களில் CASSA நிறுவ—னம் கலந்து கொண்ட பல கலந்துரையாடல்களின் மூலம், அகதி இளைஞர்கள், சட்டவல்லுநர்கள், குடியமர்வுச் சேவையின் பிரதிநிதிகளுடனும் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையிலேயே இந்நூலானது அண்மைய அகதி இளைஞர்களுக்கான இரண்டு முக்கிய தேவைகளை அடையாளப்படுத்துகின்றது. முதலாவதாக ஓர் புதிய நாட்டிற்கு வரும்போது அவர்களிடையே காணப்படும் "சமுகத்திலிருந்து தனிமைக்கு உள்ளாதல்" என்பதும்,

இரண்டாவதாக அவர்கள் வெளியேறிய நாட்டிற்கும் கனடாவில் காணப்படும் சட்டமுறைமைகளில் காணப்படும் வித்தியாசமும் கனடாவில் எதிர் கொள்ளும் அறிவு பூர்வ இடைவெளிகள் என்பதேயாகும்.

சுட்ட தகவல்களின் அடிப்படையில் அண்மைக் காலங்களில் இவ் இளைஞர்களுக்கு அதிமுக்கியத்துவம் தரும் சட்ட விடயங்களை நாங்கள் அறிய முற்பட்டோம். பல தலைப்புகள் பல சட்ட வல்லுனர்கள் குடியமர்வுச்சேவை அதிகாரிகள் ஆகியோரோடு நாம் கலந்துரையாடியுள்ளோம். ஆனாலும் எங்களால் ஒரு முழுமையான தகவலைப் பெற முடியவில்லை. சில பகுதிகள் இன்னும் ஆய்வுகளுக்கு உட்பட வேண்டியுள்ளதால் வரும் காலங்களில் இணைய வடிவில் இத்தகைய பல விளக்கங்கள் உள்ளடக்கப்படும்.

அத்துடன் கூட சட்ட விதிகள் காலத்திற்கு காலம் மாறுபடக் கூடியவையாகும். இத்துடன் நாங்கள் ஓர் வளங்களின் பகுதியை இணைத்துள்ளது பாவனையாளர் விதிகளை சரிபார்த்துக் கொள்ளவும் உதவும். இக்கைநூலானது எளிய உரை நடையில் எழுதப்பட்டுள்ளமை இலகுவாகப் புரிந்து கொள்ளவும். இக்கைநூலானது அரபி, தமிழ் மற்றும் உருது மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளமை, மொழிப்பிரச்சினையுள்ள இளைஞர்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும்

# உள்ளடக்கம்

1. அகதிகளுக்கான சட்டம் 1

2. ரொரொண்டோ புகலிட நகரம் 4

3. உங்களுக்கான உரிமைகளை தெரிந்து கொள்ளுதல் 6
உங்களுக்கான உரிமைகளை தெரிந்து கொள்ளுதல்
ஒன்ராரியோவின் மனித உரிமைக்கான குறியீடு

4. குற்றவியல் சட்டம் 9
இளைஞருக்கான குற்றவியல் நீதி முறைமை
இணையதள பாதுகாப்பு
சடுதியான தெருச்சோதனைகள்
பாலியல் தொடர்பான குற்றங்கள்
உடன்படுதல் (சம்மதம்)

5. ஒழுக்காற்று நடவடிக்கைகள் 16
நோக்கமின்றித் திரிதல்
புகைத்தல்

6. கல்வி 19
பொதுப் பள்ளிகள்
இரண்டாம் நிலைக் கல்வி

7. வேலைவாய்ப்பு 21
அகதி அந்தஸ்து கோருபவர்கள்
மாகாண முறைமைகள்
குறைந்தளவு ஊதியம்
வேலை நேரம் (மணித்தியாலங்கள்)
பொது விடுமுறைகள்
உள்ளக அல்லது பாலியல் வன்முறை தொடர்பான விடுப்பு
வேலைத்தளப் பாதிப்பு

8. வீட்டு வசதி (வீடமைப்பு) 25
வாடகைக்கு இடம் தேடுவது
வீட்டுரிமைகள் மற்றும் வெளியேற்றப்படுதல்

9. சுகாதாரம் 28
இடைக்கால தேசிய சுகாதார நிகழ்ச்சித்திட்டம்(அகதிகளுக்கான) (IFHP)

10. வளங்கள் 30

# அகதிகளுக்கான சட்டம்

1951ம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் அகதிகளின் தகுதி நிலைப்பாட்டுக்கான பேரவை மற்றும் அதன் 1967ம் நடைமுறை என்பற்றில் கனடாவும் ஓர் அங்கமாக உள்ளது. கனடாவின் அகதிக்கொள்கையானது குடிவரவு மற்றும் அகதிகள் பாதுகாப்பு விதிகளின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதுவே சாசனத்தை நடைமுறைப்படுத்த உதவுகின்றது.

குடிவரவு மற்றும் அகதிகள் பாதுகாப்பு விதிகளுக்கமைய ஓர் நபர் சாசன அகதி அல்லது பாதுகாப்பு தேவைப்படுபவர் என கருதும் பட்சத்தில் அவரை அகதிகள் பாதுகாப்புக்கு பரிந்துரை செய்கிறது.

சாசனத்தால் பரிந்துரைக்கப்பட்ட அகதிகள் எனப்படுபவர்கள் மதம், இன,
தேசிய அடையாளங்கள் காரணமாக அச்சுறுத்தலாலோ அல்லது ஒரு சமூகக் குழுவைச் சார்ந்தவர்களென அடையாளம் காணப்படுபவர்கள்:

- சொந்த நாட்டிற்கு வெளியே வசிப்பவர்களாகவும் அல்லது பயம் அச்சுறுத்தல் காரணமாக சொந்த நாட்டில் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்த முடியாமல் இருப்பவர்கள்.
- சொந்தமாக நாடு இல்லாதவர்கள் அல்லது முன் வாழ்ந்த நாட்டிற்கு வெளியே இருப்பவர்களும்இ திரும்ப முடியாமல் இருப்பவர்களும்.

பாதுகாப்பு தேவைப்படுபவர் எனப்படுபவர்களை கனடாவில் இவ்விதம் வரையறுத்துள்ளனர். அவர்களின் நாட்டில் குடியுரிமை பறிக்கப்பட்டவர்கள் அல்லது நாடு இல்லாதவர்களாக கருதப்படுபவர்கள் இவர்களின் பார்வையில் :

- துன்புறுத்தலுக்கெதிரான சாசன விதிக்கமைய ஆபத்து அல்லது துன்புறுத்தலை எதிர்நோக்குபவர்.
- வழக்கத்திற்கு மாறான தண்டனைகள் பாரிய உயிர் அச்சுறுத்தல்களை எதிர்நோக்குபவர்.

இவ்வகையானவர்களே தங்கள் வீடுகள், உடைமைகள் சொந்த நிலங்களையும் விட்டு பாதுகாப்பு கருதி வேறு நாடுகளுக்கு இடம்பெயர்கின்றனர். கனடிய அரசின் 2010ம் ஆண்டிற்கான தரவின்படி, மீள்குடியேற்ற முறையில் அல்லது அகதி அந்தஸ்து அளிக்கப்பட்ட 140 நாடுகளுக்கு மேற்பட்டவர்களின் இல்லமாக கனடா விளங்குகின்றது.

கனேடிய அகதி முறைமையானது இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது

1) அகதி மற்றும் மனிதாபிமான மீள்குடியேற்றத்திட்டத்தின் கீழ் கனடாவிற்கு வெளியே இருந்து வரும் அச்சுறுத்தலிருந்து பாதுகாப்பு தேவைப்படுவோர்.

2) கனடாவின் புகலிடகோரிக்கை திட்டத்தின் கீழ் கனடாவில் அகதிப் பாதுகாப்பைக் கோருவோர்.

அகதிகள் மற்றும் மனிதாபிமான மீள்குடியேற்ற திட்டம்

ஓவ்வொரு வருடமும் ஓர் குறிப்பிட்ட அளவு அகதி மக்கள் ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகராலயத்தின் ஊடாக உள் வாங்கப்படுகின்றனர் இவர்கள் **UNHCR** ஆல் அடையாளம் காணப்பட்டு நன்கு பரிசோதிக்கப்பட்ட பின்னரே நாட்டிற்குள் அனுமதிக்கப்படுகின்றனர்.

இவ்வகதிகளுக்கான மீள்குடியேற்ற திட்டதிற்கு கனடா எங்கிலும் இருக்கும் தனிப்பட்ட கொடையாளிகளும் உதவலாம். இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் மற்றும் 5 பேர்களைக் கொண்ட குழுவாகவும் அவர்கள் தங்கள் ஆதரவை கனேடிய அரசாங்கத்திற் கூடாக ஓர் கையெழுத்து ஒப்பந்தத்தோடு வழங்கலாம். இவ்வகையானவர்களை "புகலிட ஆதரவு ஒப்பந்த உரிமையாளர்கள்" என அழைப்போம், இவர்கள் தாங்களாகவே அகதிகளுக்கு ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கலாம் அல்லது சமூகத்தோடு இணைந்தும் இவற்றை வழங்கலாம்

கனடாவினுள் புகலிட கோரிக்கை திட்டம்

இத்திட்டத்தின் மூலம் கனடாவில் அகதிப் பாதுகாப்பை பெறுபவர்கள் இரு சாரார்:

- பய, பீதி, வெறுப்பு உணர்வுகளுக்கு முகம் கொடுப்போர்
- தங்கள் சொந்த நாட்டில், கொடூர தண்டனைகள் மற்றும் துன்புறுத்தலுக்கு இலக்கு வைக்கப்படுபவர்கள்

சில குறிப்பிட்ட சாரார் அகதிக் கோரிக்கைக்கு உரியவர்கள் அல்லது அகதிக் கோரிக்கைக்கு பரிசீலிக்கப்படத்தக்கவர்கள் அல்லர் என்பதை நாம் பார்க்கலாம். இவர்கள் கடும் குற்றச் செயல்களில் ஈடுபட்டு தண்டனை பெற்றவர்கள் முந்தைய அகதிக் கோரிக்கைகள் கனேடிய அரசினால் நிராகரிக்கப்பட்டவர்கள்.

குடியேறிய அகதிகளுக்கான உதவிகள்

கனேடிய அரசானது "மீள்குடியேற்ற உதவித் திட்டத்தின்" கீழ் இவ் அகதிகள் கனடாவில் இருக்கும்போது அத்தியாவசிய சேவைகள் மற்றும் வருமானத்திற்கு உதவுகின்றது. அகதிகளுக்கான மீள்குடியேற்ற திட்டமானது குடிவரவு அகதிகள் மற்றும் குடியுரிமை கனடாவினால் **(IRCC)** நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. இவ்வமைப்பே இவ்விண்ணப்பங்களையும், மீள்குடியேற்ற உதவித்திட்டங்களையும் கையாளுகின்றது.

இத் திட்டத்தின் மூலம் அகதிகள் ஒரு வருமானத்தை ஒரு வருடம் வரை பெற்றுக்கொள்ள அல்லது அவர்கள் தன்னிறைவு அடையும் வரை அல்லது இதில் எது முதலில் வருகின்றதோ அதைப் பெற்றுக் கொள்ளலாம். அடிப்படை சமுக உதவித்திட்டம் வீடு, உணவு, மற்றும் இதர அடிப்படை வசதிகளை வழங்குகின்றது.

தனிப்பட்ட கொடையாளிகள் தங்களால் ஆதரவு தரப்பட்டவர்களுக்கு நிதியுதவி மற்றும் உளரீதியான ஆதரவுகளை வழங்கலாம். தனிக்கப்பட்ட கொடையாளிகளின் ஆதரவு, வீடு, உணவு மற்றும் உடை இவைகளைச் சார்ந்ததாக இருக்கலாம் தனிப்பட்ட கொடையாளிகளின் ஆதரவும் அதிக பட்சம் ஒரு வருடம் இருக்கலாம். ஆனால் சில அகதிகள் தேவையைப் பெறுத்து மூன்று வருடங்கள் வரை அதைப் பெற்றுக் கொள்கின்றனர்.
அகதிகள் உள்ளடங்கலாக அனைத்து புதிய குடிவரவாளர்களுக்கான உதவி கனேடிய அரசானது, புதிய குடிவரவாளர்களுக்கான நன்மை பயற்க்கும் பொருட்டு, குடியமர்வுச்சேவையில் ஈடுபட்டுள்ளன மாகாண அரசின் நிறுவனங்கள், உதவி வழங்கும் ஸ்தாபனங்கள் மற்றும் அரச சார்ந்த நிறுவனங்கள் மூலம் இவ் உதவ—
ியை வழங்கி வருகின்றது.

புதிய குடிவரவாளர்களுக்கான சேவைகள்:

— அவர்களின் குடியமர்வு தேவைகளை அறிந்துகொள்ளவும், சமூகத்தில் இத்தேவைகளுடன் அவர்களை இணைப்பதிலும்

— கனடாவைப் பற்றி அறிந்து கொள்ளவும் (இச் சேவை அவர்கள் வாழ்ந்த நாட்டிலேயே கனேடிய அரசாங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு விளக்கங்களோடு வழங்கப்பட்டு வருகின்றது)

— கனடாவில் வாழுவதற்குரிய வகையில், ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழிகளில் பயற்சி

— வேலை தேடுவதிலும் வேலைகளை பெற்றுக் கொள்வதிலும் உதவி

—அதிக காலம் கனடாவில் வாழ்பவர்களும் நீண்ட கால தொடர்புடைய குடியேற்ற வாசிகளுடனும் ஒரு சமூக தொடர்புகளை ஏற்படுத்த முயல்வது

— அத்துடன் கீழ்க்காணும் உதவி சேவைகளுடன் ஓர் வழியை தொடர்பை ஏற்படுத்தல்

- ☐ பிள்ளைப் பராமரிப்பு
- ☐ போக்கு வரத்தின் பயன்பாடு
- ☐ மொழி பெயர்ப்பு மற்றும் மொழி மாற்ற சேவைகளை அறிந்து கொள்ளல்
- ☐ மாற்றுத் திறனாளிகளுக்கான வளங்களை அறிந்து கொள்ளும் சேவை.
- ☐ உளவியல் நெருக்கடிக்கான குறுகிய காலத் தீர்வை கண்டு கொள்ளல்
- ☐ இவ்வகதி கனேடிய பிரஜையாகும் வகையில் குடியமர்வு சேவையின் பலா பலன்களை தொடர்ந்து பாவித்தல்

# ரொரொன்ரோ நகரம் ஒரு புகலிட நகரம்

புகலிட நகரம் என்றால் என்ன?

புகலிட நகரத்தின் தத்துவமானது ஓர் "வழி" யை ரொரொன்டோவில் ஏற்படுத்திக் கொடுப்பதாகும். அந்தஸ்தற்ற குடியேற்ற வாசிகளும் நகர நிர்வாகத்தினால் வழங்கப்படும் சில வசதிகளைப் பெற்று கொள்ள இது உதவுகின்றது. நகர நிர்வாக அலுவர்களோ அல்லது பொலிசாரோ கூட இவர்களை ஓர் தேவைக்காக அணுகும் போது அவர்களின் நிலை அல்லது தர அந்தஸ்தை கேட்க முடியாது, அத்துடன் அவர்கள் பற்றி கனேடிய குடிவரவுத்துறையிடமும் புகாரளிக்கவும் முடியாது.

அந்தஸ்து அற்ற குடியேற்ற வாசிகள் என்பவர் யார்?

அந்தஸ்து அற்ற குடியேற்ற வாசிகள் என்பவர்கள் கனடாவை தங்கள் சொந்த இல்லமாக ஏற்றுக்கொண்டாலும் சட்ட பூர்வ குடியேற்ற ஆவணங்கள் இல்லாதவர்கள். இவர்கள், அகதி கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்கள், ஆவணங்களற்ற குடியேற்ற வாசிகள், அகதிகளுக்கான சபை மற்றும் கனேடிய குடிவரவு முடிவு இவர்களின் பதிலுக்காக காத்திருப்பவர்கள் மீளிணைப்பு ஒப்பந்த ஆதரவுகளின் முறிவுகளை சந்தித்தவர்கள், தற்காலிக தொழிலாளர், மாணவர்கள், விருந்தினர் நுழைவு அனுமதி காலவதியானவர்கள், என்பவர்களாவர்.

ரொரொன்டோ நகரம் (ரொரொன்டோ பெரு நிர்வாகம் GTA அல்ல) குடியேற்ற வாசிக– ளின் அந்தஸ்து தொடர்பாக "கேட்காதே" மற்றும் "சொல்லாதே" என்னும் ஓர் கொள்கையை அமுல்படுத்தியிருந்து. இதன் மூலம் நகர நிர்வாக அதிகாரிகள் அறிய விரும்புவது

1) தெரிவு செய்யப்பட்ட சேவைகளை இவர்கள் கோரும் போது விசாரணை தேவையில்லை

2) அவர்களுக்கு உரிமையுள்ள சில சேவைகளை நாடும் போது மறுக்க முடியாதென்பதும்

3) இவர்களுடைய தனிப்பட்ட அடையாள தகவல்களை, மத்திய, மாகாண சட்டதிட்டங்களுக்கு உட்பட்டிருக்கும் பட்சத்தில் தரவேண்டியதில்லை.

இச் சேவைகள் பின்வருபவைகளை உள்ளடக்கும்: ரொரொண்டோ முன்பள்ளி மற்றும் பிள்ளை பராமரிப்பு சேவைகள், பல் மருத்துவம் அவசர அல்லது நெருக்கடி நிலை கூடாரம், தற்காலிக சேவை மையங்கள், வீடமைப்பு உதவிகள் தனிப்பட்ட சந்தை, வா– டகை வீடுகள் ஆரம்ப சுகாதார நிலையங்கள், தடுப்பூசிகள், குழந்தை பிறப்புக்கு முன்னுள்ள உளவள ஆலோசனை, ரொரொன்டோ வேலை வாய்ப்பு மற்றும் சமூக சேவை மையங்கள், இன்னல் தொடர்பான நிதி, சமூகப் பராமரிப்பு மையங்களுக்கான பரிந்துரைகள், தீ மற்றும் அவசர ஊர்திச் சேவைகள் துஸ்பிரயோகத்திற்கெதிரான உளவள ஆலோசனை, நூலக உதவிகள் மற்றும் சட்ட உதவி சேவைகள், இவைகள் உங்களுடைய குடிவரவு அந்தஸ்து, உணவு வங்கி, ஓரினச்சேர்க்கையாளர்களுக்கான ஆலோசனை, பிள்ளைப்பராமரிப்பு, பொழுது போக்கு மற்றும் தன்னார்வ தேவைகளுடன் உங்களை இணைக்க உதவுகின்றது.

ஓர் அவசர மருத்துவ உதவிக்காக 911ஐ அழைத்து முதலுதவி ஊர்திச் சேவையை மாத்திரம் நீங்கள் கோரலாம்

ஒவ்வொரு 18 வயதுக்குட்பட்ட பிள்ளைக்கும் அவர்களின் பெற்றோரினது குடிவரவு அந்தஸ்து எப்படி இருப்பினும் அதைக் கருத்தில் கொள்ளாமல் ஒன்ராரியோவில் உள்ள ஏதாவது ஓர் பள்ளியில் கல்வியை மேற்கொள்ளும் உரிமை உள்ளது.

# உங்கள் உரிமைகளை அறிந்து கொள்ளுங்கள்

கனேடிய அரசியலமைப்பு உரிமைகள் மற்றும் சுதந்திரத்திற்குமான ஆவணம்.

அரசியலமைப்பானது கனடாவின் அதி உயர்ந்த சட்டமாக கருதப்படுகின்றது. பொதுவாக ஒப்பு நோக்குகையில் இதர எல்லா சட்டங்களும் அரசியலமைப்பு விதிகளுடன் ஒத்திசைந்து செல்வதைக் காணலாம். அவைகள் அப்படிக் காணப்படாத விடத்து அவைகள் வலுவிழந்து போகும் நிலை ஏற்படும். அரசியலமைப்பு உரிமைகள் மற்றும் சுதந்திரத்திற்குமான ஆவணமானது கனே—டிய அரசியலமைப்பின் பகுதியாக இருந்து வந்த காலம் முதலே சட்டமீறல்கள் இவ்வுரிமை ஆவணத்தை செயலிழக்க செய்திருக்க முடியும். இதுவே இவ் ஆவணத்தை கனடாவின் மிகவும் முக்கியமான சட்டமாக மாற்றியுள்ளது.

கனேடிய அரசியலமைப்பு உரிமைகள் மற்றும் சுதந்திரத்திற்குமான ஆவணமே 1982ம் ஆண்டிற்கான முதல் அரசியலமைப்பை உருவாக்க உதவியது.

இவ்வாவணமே கனடாவில் வாழும் எல்லா கனேடியர்கள் மற்றும் நிரந்தர வதிவாளர்களுக்குமான உரிமைகளை உறுதிப்படுத்தவும் இவைகளை சிலவற்றை கனடாவில் வாழும் ஒவ்வொருவருக்கும் உறுதிப்படுத்தவும் உதவுகின்றது.

இவ் ஆவணத்தின் மூலம் கனேடிய குடிமக்கள், நிரந்தர வதிவாளர்கள் மற்றும் புதிய குடிவரவாளர்களுக்காக கீழ்க்காணும் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன:

- ☐ எந்தவொரு மதத்தையும் பின்பற்றும் உரிமை
- ☐ வெளிப்படுத்தும் உரிமை, பத்திரிகை சுதந்தரம் மற்றும் அமைதி வழி கூட்டங்கள்
- ☐ கனடாவின் எப்பகுதியில் வாழும் உரிமையும், எப்பகுதியிலும் வேலை தேடும் உரிமை.
- ☐ கனடாவின் ஏதாவதொரு உத்தியோகபூர்வ மொழியையும் (ஆங்கிலம், பிரெஞ்சு) பாவிக்கும் உரிமை
- ☐ கனடாவின் பல்கலாச்சார பாரம்பரியத்தின் பாதுகாப்பு
- ☐ வாக்களிப்பதற்கான ஜனநாயக உரிமை

கனடாவில் வாழும் எந்தவொரு நபரின் குடிவரவு அந்தஸ்து எப்படியிருப்பினும் அவரின் உரிமைகள் இவ் ஆவணத்தினால் பாதுகாக்கப்படுகின்றது.

— சட்டத்திற்கு முன்னால் யாவரும் சமமே. சமமான உரிமைகள் சமமான

பாதுகாப்பு உட்பட எல்லா உரிமைகளையும் வழங்குகின்றது. இன, நிற, சாதி, பிரதேச, மத, பால், வயது, மனநிலை மற்றும் அங்கவீனர்கள் என்ற எந்த பாகு—பாடும் இன்றி சட்டம் செயல்படுகின்றது.

— வாழுவதற்கான உரிமை, சுதந்திரம், பாதுகாப்பு என்பவை ஒரு நபருக்கு இச் சட்ட உரிமைகள் வழங்கப்படுகின்றது.

— காரணமற்ற தேடுதல்கள் மற்றும் தடுத்து வைத்தல் இவற்றிலிருந்து பாதுகாக்கும் உரிமையை பெற்றுக் கொடுக்கின்றது

— தன்னிச்சையான கைதுகள் மற்றும் தடுத்து வைத்தல் இவைகளிலிருந்து பாதுகாப்பு

— ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்படும்போதோ அல்லது தடுத்து வைக்கப்படும் போதோ அவரின் உரிமைகளாவனஹ

— 1) கைதுக்கான சரியான காரணத்தை அறிந்து கொள்ளல்

— 2) எந்தவித தாமதமில்லாது அவர்களுக்குரிய சட்ட ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை அறிவித்தலும் உறுதி செய்தலும்

— எந்த வித கொடூரமான அல்லது வழக்கத்திற்கு மாறான தண்டணைகளும் வழங்கப்படாதிருப்பதை உறுதி செய்தல்

இவ் ஆவணத்தில் காணப்படும் உரிமைகளும், சுதந்திரங்களும் முழுமையென்று கொள்ள முடியாது. மேலும் இவைகள் தேசிய விழுமியங்கள் அல்லது மற்றய முக்கிய உரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு மாறுபாடடைகின்றது.

மனித உரிமைகளுக்கான நெறிக்கோவை — ஒன்டாரியோ

ஒன்டாரியே மாகாணத்தில், மனித உரிமைகளுக்கான நெறிக்கேவையானது விசேட பாதுகாக்கப்பட்ட சமுக வலயங்களுக்கூடாக, சகல மக்களுக்கும், சம உரிமை, சந்தர்ப்பங்கள் எவ்வித பாகுபாடுமின்றி வழங்கப்படுகின்றன.
உதாரணம் வீடமைப்பு, வேலைவாய்ப்பு, கல்வி, பொருட்கள் தொழிற்சங்க உறுப்பினர்கள் மற்றும் வர்த்தக, தொழிற்சங்க உறுப்பினர்களுக்கு மற்றும் வர்த்தக, தொழில்சார் அமைப்புகளுக்கான சேவைகளும் வசதிகளும்
முக்கியமாக இக் கோவையானது எந்த மனிதருக்குள்ளும்காணப்படும்
எதுவித ஏற்றத்தாழ்வுகளையும் கருத்திற் கொள்ளாது செயற்பட்டு ஓர் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது

பாகுபாடு என்பது என்ன?
ஓர் வேலைக்காக விண்ணப்பிக்கும் போதோ, வாடகைக்கு ஓர் வீட்டை அமர்த்தும் போதோ, மளிகைப் பொருட்களை வாங்கும் போதோ, உணவகத்திற்கு செல்லும் போதோ, அந்தந்த சேவை வழங்குனரின் அல்லது அரசாங்கங்களின்

விதிகள் அல்லது எதிர்பார்ப்பிற்கேற்ப நாம் நடந்து கொள்ள வேண்டியுள்ளது இவ்விதம் நீங்கள் செல்லும் சந்தர்ப்பத்தில் மற்றவர்களை விட வேறுபாடான ஓர் நடவடிக்கையை அல்லது அந்த சேவை உங்களுக்கு மறுக்கப்பட்டால் அதுவே பாகுபாடு ஆகும்.

மனித உரிமைச் கோவை நெறியானது பின்வரும் அடிப்படைகளில் பாகுபாடு காட்டப்படுவதை தடுக்கிறது

1) குலம் /சாதி/ இனம்
2) பூர்வீகம்
3) நிறம்
4) குடியுரிமை அந்தஸ்து
5) சமய நம்பிக்கை
6) பால் / கர்ப்பிணி/பாலுட்டும் தாய் நிலை
7) பால் நாட்டம்
8) பால் நிலை அடையாளம்
9) பால் நிலை வெளிப்பாடு
10) வயது
11) விவாக அந்தஸ்து/ குடும்ப அந்தஸ்து
12) ஊனம் (ஆற்றலின்மை)
13) பொது உதவிக்கான அங்கீகாரம்( வீட்டு வசதிக்கு மாத்திரம்)
14) கற்றங்களுக்கான பதிவுகள் (வேலை வாய்ப்புக்கு மாத்திரம்)

மேற்காணப்படும் எந்த வகையிலாவது நீங்கள் பாகுபாடு காட்டப்படுவதை உணர்வீர்களானால் அந்த நபருக் கெதிராக ஒன்டாரியோ மனித உரிமைத் தீர்ப்பாயத்தில் நீங்கள் முறையீடு செய்யலாம். உங்கள் உரிமை மறுக்கப்பட்டுள்ளதென்பதை தீர்ப்பாயம் கண்டு கொள்ளும் பட்சத்தில் அதற்குரிய தீர்வையும், இழப்பீடுகளையும் நீங்கள் பெற்றுக் கொள்ள ஆவன செய்யப்படும்.

ஒன்டாரியோ மாகாணத்தில், மனித உரிமைகளுக்கான நெறிக்கேவையானது சில குறிப்பிட்ட சமூக முறைமைகளில் எல்லா மக்களுக்கும் பாரபட்சமற்ற உரிமைகளையும் வாய்ப்புகளையும் வழங்கி வருகிறது.

## இளையோருக்கான குற்றவியல் நீதித்துறை அமைப்பு

ஒன்ராரியோவில், குறிப்பாக 12—17 வயதிற்குட்பட்ட இளையோர்கள் சட்டத்திற்கு உட்படும்போது அல்லது சிக்கல்களை எதிர்நோக்கும் போது, சட்டமானது அவர்களை வயது வந்தவர்களிடமிருந்து வித்தியாசமாக கையாளுகின்றது. ஓர் இளையவர் சட்டத்தை மீறும் போது □இளையோர் குற்றவியல் நீதி மையமா—னது இந் நிலைமையை எவ்விதம் கையாள வேண்டுமென்று பொலிசார்களுக்கு அறிவுறுத்துகின்றது. குற்றத்திற்கான ஆழத்தைப் பொறுத்து குற்றம் சாட்டப்பட்டுள்ள இளையவர் போலிசாரிடம்இருந்து எச்சரிக்கையைப்
பெறுவார். சமூகப் பணிகளில் ஈடுபட கேட்டுக் கொள்ளப்படுவார். அல்லது நீதி மன்றுக்கு அனுப்பிவைக்கப்படுவார். இவ் இளையோர், சட்டத்தின் கீழ் சில சிறப்புரிமைகளைப் பெற ஏதுவானவர்கள். தனிப்பட்ட பாதுகாப்பு, ஊடக மீளாய்வு என்பவை அடங்கலாக.

இளையவர்களுக்கான உரிமைகள்

இளையவர் என்று குறிப்பிடப்படுவது ஒருவர் பார்வைக்கு (அல்லது தோற்ற வேறுபாடு) 12 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர் ஆனால் 18 வயதிற்கு குறைந்தவராக இருத்தல் வேண்டும்.

இளையோருக்கொதிரான நீதிமன்ற செயல்முறைகளில் சில விஷேசித்த பரிசீலனைகளுக்கு வாய்ப்புண்டு

அவையாவன:

- □ நீதிமன்ற செயல்முறைகள்இறுதியில் அவர்களுக்கு பாதிப்பான தீர்ப்புக்களைக் கொண்டு வருமெனக் கருதினால் இளையோருக்கு அவைகளை செவிமடுக்க கலந்துகொள்ளும் உரிமையை வழங்குகின்றது.
- □ அவர்களின் தன்மானம், கண்ணியம் காக்கப்படும் விதத்தில் கருணையுடனும், மனிதாபிமானத்துடனும் நடத்தப்படல் வேண்டும்
- □ நீதிமன்ற செயல் முறைகளின் போது எல்லாவித தகவல்களும் வழங்கப்படுவதோடு, பங்குபெறவும், செவிமடுக்கவும் உரிய ஏற்பாடுகளைச் செய்வதோடு
- □ செயற்பாடுகளை பெற்றோருக்கு அறிவிப்பதோடு, அவர்களை பிள்ளையின் நலனில் ஈடுபடச் செய்து பிள்ளைகளின் நன்னடத்தையை ஊக்குவிக்கும் விதமாக அறிவுரை வழங்கவும் செய்தல்

18 வயதை அடைந்தபின்னர்

இளையவர் ஒருவருக்கான நடைமுறை ஆணையை “இளையோர் குற்றவியல் நீதித்துறை அமைப்பின் கீழ் முன்னெடுக்கையில் அவர் 18 வயதை

அடைந்தவராயிருப்பினும் இளையோருக்கான நீதிமன்றில் தன் வழக்கை கொண்டு நடத்த முடியும்.

இளையவர் ஒருவருக்கு எதிராக குற்றம் சாட்டப்படும் போது அல்லது அவர் அதை ஒத்துக் கொள்ளும்போது அவர் 18 வயதை அடைந்தவராயிருந்தாலும் இச்சட்டத்தின் கிழ் அவர் இளையவராகவே கருதப்படுவார்.

ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளும் உரிமை

இளையவர் ஒருவருக்கு எவ்வித தாமதமும் இல்லாமல் ஓர் வழக்கறிஞரை அமர்த்தும் உரிமை உண்டு. அவருக்கு எதிரான தருணங்களில் இவ்வுரிமையை தனிப்பட்ட முறையிலும் பயன்படுத்த முடியும்.

ஓர் இளையவர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தருணத்தில் அவ் அலுவலர் கட்டாயம் அவ் இளையருக்கு வழக்கறிஞரை பெற்றுக் கொள்ளும் உரிமை பற்றி விளக்க வேண்டியுள்ளதுடன் வழக்கறிஞரை சந்திக்கவும் பேசவும் சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

பெற்றேருக்கான அறிவித்தல் – (கைது மற்றும் தடுத்து வைக்கும்போது)

ஓர் இளையவர் கைது செய்யப்பட்டு தடுத்து காவலரால் வைக்கப்படும் போது அவ்வலுவலர் கட்டாயம் அவ் இளைஞரின் பெற்றேருக்கு அல்லது பாதுகாப்பாளருக்கு கைதுக்கான காரணத்தை அறிவிப்பதோடு உடனடியாக கைது நடைபெற்ற இடத்தையும் அறிவிக்க கடமைப்பட்டுள்ளார்.

பெற்றோருக்கான அறிவித்தல்– (கட்டாயமற்ற தருணங்கள்) குற்றம் சாட்டப்பட்டுள்ள இளையவர் குற்றத்தை ஒத்துக் கொள்ளும்போது அத்துடன் இவ்வழக்கு இளையோர் நீதிமன்றத்தில் முன்னால் எடுக்கப்படும் தருணத்தில் இளையவர் 20 வயதைக் கடந்தவராக இருப்பின் பெற்றோருக்கு அறிவிக்க வேண்டிய அவசியமில்லை.

## இணையதள பாதுகாப்பு

சமூக தொடர்பு சாதனங்கள் இளைஞர்களின் நாளாந்த வாழ்க்கையில் உண்டான சகல வலையமைப்பு மற்றும் தொடர்புகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. சமூக வலைத்தொடர்பு விண்ணப்பங்கள், இணயதளம், உரையாடும் தளங்கள், வலைய அமைப்புகள் ஆகியவகைகள் எமது நாளாந்த வாழ்வின்

பகுதிகளாகி விட்டன. எந்த அளவுக்கு இவைகளை நாங்கள் உபயோகிக்கின்றோமோ அந்தளவுக்கு எங்கள் பாதுகாப்பும் தனித்துவமும் கேள்விக்குறியாகின்றது. நாங்கள் இவைகளைப் பற்றிய கவனமின்றி பாவிப்போமானல் இளையதளம் எங்களுக்கு ஓர் ஆபத்தான இடமாகவே இருக்கும். பாலியல் துன்புறுத்தல் மற்றும் தொல்லைகள் ஆகிய இரண்டும் இளையவர்கள் குறிப்பாக இணையதளத்தில் சந்திக்கும் இரண்டு ஆபத்துக்களாகும்.

**RCMP (Royal Canadian Mounted Police's Crime Prevention) www.rcmp.gc.ca** எனப்படும் கனேடிய அரசு படையின் பிரிவான இளையோருக்கான குற்றத் தடுப்பு மையமானது இணையத்தொல்லைகளுக்கான சரியான வரைவிலக்கணங்களையும் வழிகளையும் ஆரய்ந்து வகுத்துள்ளது. இணையதளம் தொடர்பான நடவடிக்கைகளின் சட்டங்களையும் காரணங்களைப் பற்றிய விழிப்புணர்வு மிக அவசியமானதாகும். இணையதளம் தொடர்பான தகவல்களின் துஸ்பிரயோகமானது கட்டுப்பாட்டை மீறும் செயலோடு பாரிய குற்றமுமாகும்

## இணையதள தொல்லைகள்

இணையதள தொல்லையென்பது, இணையம், சமூக வலையமைப்பு, இணையதளம், மின்னஞ்சல், குறும் செய்தி ஆகிய தகவல் தொடர்பு சாதனங்களுடன் தொடர்பு பட்டதுடன், மிரட்டுதல் தொடர்ந்து மற்றயவரை அச்சுறுத்துதல் என்பதாகும்.

இணையதள தொல்லைகள் என்பன

- ☐ குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலம் பயமுறுத்துவது
- ☐ சங்கடப்படுத்தும் வகையில் படங்களை இணையத்தில் வெளியிடுவது
- ☐ மற்றவர்களை கேலி செய்யும் விதத்தில் இணையதளம் உருவாக்குவது
- ☐ மற்றவர்களின் பெயர்களில் பாசாங்கு செய்வது
- ☐ மற்றவர்களின் தனிப்பட்ட தகவல்களில் ஊடுருவி அவற்றை ஏனையவர்களுக்கு அனுப்புவது
- ☐ ஒருவரின் வெளித் தோற்றம், பால்நிலை, மதம், பால் நிலை ஈடுபாடு இவை—களைக் கேலி செய்வது
- ☐ ஒருவரை தொடர்ந்து துன்புறுத்தும் வகையில் பெயர் சொல்லி அனுப்புவது
- ☐ இணையத்தில் உங்களைத் திகைப்படைய செய்யும் வகையில் கருத்துக்களை வெளியிடுவது.

துன்புறுத்தலும் அது தொடர்பான சட்டங்களும்

கனடாவில் தொன்று தொட்டு காணப்பட்டு வரும் குற்றச் செயல்கள் நவீன இலத்திரனியல் சாதனங்கள் மூலம் இழைக்கப்படுகையில் அது கனேடிய குற்றவியல் நெறிமுறையின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றது அதனால்தான் அநேக இணையக் குற்றங்கள் துன்புறுத்தல் தொடர்பான குற்றங்கள் அல்லது பாலியல் துன்புறுத்தல்களின் கீழ் குற்றஞ்சாட்டப்படுவரொருவர் குற்ற நெறிக் கோவையின் கீழ் வழக்குப் பதிவதுடன் 5 வருடங்களுக்கு குறையாத சிறைத் தண்டனையையும் அனுபவிக்க நேரிடும்.

தொல்லை தரும் குற்றங்கள் (தண்டனைக்குரியவை)

தொடர்ந்து ஒருவரின் பாதுகாப்புக்கு அச்சம் விளைவிக்கும் வகையில் இணையம், குறுஞ் செய்திகள் தொலைபேசி அழைப்புக்கள், மின்னஞ்சல் மூலமாக வதைத்தல்

சிறுவர்களுக்கெதிரான ஆபாச குற்றம்

18 வயதிற்கு குறைவான சிறுவரிடம் அந்தரங்க ஆபாச புகைப்படங்களை அல்லது காணொளிக் காட்சிகளை பரிமாறுவது.

மிரட்டுதலும் பணம் பறித்தலும்

ஒருவரின் தனிப்பட்ட தகவல்களை வெளியிடுவதாகக் கூறி மிரட்டுவதும், ஒத்துழைக்காதவிடத்து மென்மேலும் ஆபத்துக்களை ஏங்படுத்துவதென தெரிவிப்பதும்.

அடையாளத் திருட்டு/மோசடி

ஒருவருடைய நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையி ல் அவருக்கெதிரான வதந்தியைப் பரப்புவதும் மற்றும் போலியான சுயவிபரக் கோவையைத் தொகுத்து இணையத்தில் வெளியிடுவது.

நீங்களோ அல்லது உங்களுக்கு தெரிந்தவரோ இம்மாதிரியான மிரட்டலுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் போது உங்கள் அருகாமையில்லுள்ள போலிஸ் நிலையத்திலோ, அல்லது இணையக் குற்றத்தடுப்பு தகவல் (CYBERTIP.CA) மையத்திற்கு அறியத்தரல் வேண்டும். தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பொலிசார் எவ்வகை நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது என தீர்மானிப்பார். இணையக் குற்றங்களில் ஈடுபடுவது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கெதிராக பொலிசார் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்வதும், குற்றம் நிரூபணமானால் தகுந்த அபராதமோ, சிறைத்தண்டனையோ கிடைப்பது தவிர்க்க முடியாததாகும்.

## சடுதியான தெருச் சோதனைகள்

### சடுதியான மேற்கொள்ளப்படும் தெருச் சோதனைகள்

ரொரன்ரோ பொலிசாரினால் சடுதியாக மேற்கொள்ளப்படும் இவ்வகை புலனாய்வு கூட்டு நடவடிக்கைகள் எமது சமூகத்தினால் மக்களின் உரிமைகளின் மேல் நடாத்தப்படும் ஓர் திட்டமிட்ட மீறுதல் என்றே பார்க்கப்படுகின்றது. ஆனால் இப்பொழுதோ பொலிசாரினால் மேற் கொள்ளப்படும் அவ்வாறான சட்டத்திற்கு முரணான தகவல் சேகரிப்புக்கள் மற்றும் பாகுபாடுகள் இவற்றுக் கெதிரான புதிய நடைமுறைகள் அமுலில் உள்ளன.
ஒன்ராரியோவில் பொலிசார் மனம்போன போக்கில் தகவல்களை சேகரிப்பதும் அல்லது ஒருவரை இன அடிப்படையிலோ அல்லது அவர் வாழும் குற்றம் நிறைந்த பகுதியை வைத்து முடிவெடுப்பதோ தடை செய்யப்பட்டுள்ளது.

மேலும் பொலிஸ் அதிகாரிகள் வெறும் மேலோட்டமான உங்கள் தோற்றத்தை வைத்து அல்லது நீங்கள் வாழும் பகுதியை வைத்து மட்டும் தகவல்கயை அறிய முற்பட முடியாது.

போலிஸ் அதிகாரிகள் கீழ்க் குறிப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் உங்களை அடையாளப்படுத்தும் தகவல்களை அல்லது ஆவணங்களை கோர முடியாது.

- சந்தேகப்படும் படியான நடவடிக்கைகளை பார்வையிடும் போது
- புலனாய்வு சம்பந்தமான தகவல் சேகரிப்பின் போது
- குற்ற நடவடிக்கை தொடர்பான புலன் விசாரணையின் போது

மேலும் பொலிஸ் அதிகாரிகள் வெறும் மேலோட்டமான உங்கள் தோற்றத்தை வைத்து அல்லது நீங்கள் வாழும் பகுதியை வைத்து மட்டும் தகவல்கயை அறிய முற்பட முடியாது.

பொலிஸ் அதிகாரிகள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் உங்களை அடையாளப்படுத்தும் தகவல்களை அல்லது ஆவணங்களை கோர முடியும்

- போக்கு வரத்து தடுப்பு சோதனையின் போது ஒருவரைக் கைது செய்யும் போது அல்லது தடுத்து வைப்பின் போது
- ஓர் பிடியாணையை நிறைவேற்றும் போது
- ஓர் குறிப்பிட்ட பிரத்தியேகக் குற்றம் தொடர்பான புலன் விசாரணையின் போது

சடுதியான தெருச் சோதனைகளின் புதிய விதிகளுக்கமைய பொலிசார் ஓர் குடிமகனை தெருச் சோதனைக்காக நிறுத்தும் போது அவர் எந்த அடையாளப்படுத்தும் தகவல்களை அல்லது ஆவணங்களை சமர்பிக்கத் தேவையில்லை என்பதை அவருக்கு அறிவுறுத்த வேண்டும். போலிசார் தெருச் சோதனையின் போது அடையாளப்படுத்தும் தகவல்களை ஏன் கேட்கின்றார்கள் என்பதற்கான காரணத்தைக் கூற வேண்டும்.

ஒரு குடிமகன் போலிசாரினால் அவர் "உயர் குற்ற வலயத்தில்" வசிக்கின்றார் என்ற காரணத்தினால் தடுத்து நிறுத்தப்படுவாரேயானால் அவர் அதற்கு பதிலளிக்க மறுக்கலாம் அல்லது அந்த இடத்திலிருந்து விலகிச் செல்லலாம். அத்துடன் பொலிசார் குடிமக்களுக்கு தங்கள் பெயர், அடையாள இலக்கம், மேலும் சுதந்திரமான போலிஸ் மீளாய்வு இயக்குனர் அலுவலகத்தை எவ்விதம் தொடர்பு கொள்ள முடியும் என்ற அறிவித்தலையும் வழங்க கடமைப்பட்டுள்ளனர்.
போலீஸ் அதிகாரிகள் உங்கள் வசிப்பிடத்தைக் காரணம் காட்டி தகவல்களை அல்லது ஆவணங்களை சேகரிக்க முற்பட முடியாது.

## பாலியல் குற்றங்கள்

### All sexual activity without consent is a criminal offence, regardless of age.

கனேடிய குற்றவியல் கோவையானது பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டல் இவற்றிலிருந்து எல்லாக் கனேடியர்களையும் பாதிக்கின்றது
உதாரணமாக இது எல்லோரையும் பாதுகாக்கின்றது சிறு பிள்ளைகள் அடங்கலாக கீழ்க் காண்பவற்றிலிருந்து:

- பாலியல் தாக்குதல்
- ஆயுத முனையிலான பாலியல் தாக்குதல்
- வலுவான பாலியல் தாக்குதல்
- பார்வையில் காமம் மற்றவர்களின் அந்தரங்க அல்லது பாலியல் வாழ்க்கையை பார்ப்பது.
- ஆட்கடத்தல்.
- ஒருவரின் விருப்பமில்லாது அவரின் தனிப்பட்ட புகைப்படங்களை வெளியிடுவதும் விநியோகிப்பதும்

பாலியல் கொடுமைகள் என்றால் என்ன?

- ☐ நம்பிக்கைக்குரிய ஒருவர் அல்லது அதிகாரத்தில் இருப்பவர் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி மற்றவரை பாலியல் இச்சைக்கு உட்படுத்துவது. 16 அல்லது 17 வயதுடைய எந்தவொரு நபரும் சந்தர்ப்பத்திலும் அவ்வொரு பாலியல் நடவடிக்கைக்கு உடன் பட முடியாது. அவர்கள்

அப்படி உடன்பட்டாலும் சட்டம் அவர்களை பாலியல் கொடுமைக்கு உள்ளானவர்களாகவே கருதும்.

கீழ் காணப்படும் உதாரணங்களைப் பார்க்க.

— அவர்களின் பாலியல் நடவடிக்கையின் பங்காளி ஓர் நம்பிக்கைக்கு உரியவராக இருப்பின் உ+ம் (ஆசிரியர், பயிற்றுவிப்பாளர்)

— இளம் வயதினரின் பாலியல் பங்காளி ஓர் தங்கியிருப்பாளராக இருக்கும் பட்சத்தில் உ+ம் (பராமரிப்பாளர், உதவியாளர்)

— இளம் பிராயத்தினருக்கும் அவருடைய பாலியல் பங்காளிக்குமான உறவு முறை தன்னல நோக்கமுடையதாக இருக்குமானால்

கீழ்க் காணும் காரணிகள் ஒரு இளம் பிராயத்தினரின் உறவு முறை பாலியல் கொடுமைக்குள்ளாவதைத் தீர்மானிக்கின்றன.

— இளம் பிராயத்தினரின் வயது

— இளம் பிராயத்தினரினதும் அவரின் பாலியல் பங்காளிகளுக்கும் இடையேயுள்ள வயது வித்தியாசம்

— உருவாகியுள்ள அவ்வுறவுமுறைக்கான ஆரம்பம், உடனடியாகவா, இரகசியமாகவா அல்லது கணனி வலையமைப்பின் ஊடாகவா என்பதைப் பொறுத்து

— பாலியல் பங்குதாரர் தன் செல்வாக்கை பயன்படுத்தினரா, தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தாரா என்பதைப் பொறுத்து.

உடன்படுதல் தொடர்பான சட்ட விதிகள்

எந்தவொரு உறவுமுறையும் உடன் இசைவுக்கு உட்பட்டதாக இருந்தல் வேண்டும். இளம் பிராயத்தினர் ஒருவர் பங்காளர் ஒருவரோடு உறவு முறையில் இருக்கும் போது அவருடைய சம்மதத்தை பெற வேண்டியுள்ளதையும் சம்மதம் தொடர்பான சட்டவிதிமுறைகளையும் அறிந்திருத்தல் அவசியம். ஒருவரைத் தொடவோ அல்லது அவரை உணர்வினால் அணுகவோ கூட அவரின் சம்மதம் தேவைப்படுகின்றது. ஒருவரின் சம்மதமில்லாத எந்த வொரு பாலியல் நடவடிக்கையும் தண்டனைக்குரிய குற்றமாகும். இதற்கு வயது பேதம் இடையாது. இவை கடுமையான தண்டனைக்குரிய குற்றங்களாகவும் இவற்றிக்கான தண்டத் தொகையும் அதிகமாக உள்ளது.

இவ்வாறான குற்றங்களுக்கு குற்றறெறிக் கோவையின் கீழ் குறைந்தபட்ச கட்டாய தண்டனைகள் உண்டு.

# ஒழுக்காற்று தடைகள்

## நோக்கமின்றித் திரிதல்

இக்குற்றமானது நோக்கமின்றி ஓர் இடத்தில் தரித்திருந்தல் சட்டவிரோத நடவடிக்கைக்காக இடங்கள் தெரிவு செய்தல் என்பவற்றை உள்ளடக்கியதாகும்.

ஒன்ராரியோவில் பிள்ளைகள் மற்றும் குடும்ப சேவைகள் தொடர்பான விதிகள் நோக்கின்றித் திரிதலை இவ்விதம் விபரிக்கின்றன. 16 வயதுக்குட்பட்ட எந்தவொரு நபரும் பொது இடங்களில் இரவு 12:00 மணிக்கும் காலை 6:00 மணிக்குமிடைப்பட்ட நேரத்தில் தனியாக காரணமின்றி சுற்றித்திரியலாகாது.

பெற்றோரின் துணையின்றி அல்லது அனுமதி பெறப்பட்ட 18 வயது நிரம்பிய ஒருவரின் துணையின்றி 16 வயதுக்கு குறைந்த ஓர் நபர் பொதுக் களியாட்ட இடங்களில் இரவு 12:00 மணிக்கும் காலை 6:00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் தனியாக நடமாட முடியாது.

பெற்றோரின் துணையின்றி அல்லது அனுமதி பெறப்பட்ட 18 வயது நிரம்பிய ஒருவரின் துணையின்றி 16 வயதுக்கு குறைந்த ஓர் நபர் (தோற்றத்திலாவது) இவ்வகையில் சுற்றித்திரிந்தால் போலீசாரால் கைது செய்யப்பட்டு வீட்டுக்கோ அல்லது பாதுகாப்பான ஓர் இடத்துக்கோ அழைத்துச் செல்லப்படுவர். இவ்வகைச் சந்தர்ப்பங்களில் போலீசார் பிடியாணையின்றி அந்நபரை கைது செய்ய முடியும்.

## புகையற்ற ஒன்ராரியோ

சுகாதாரம் மற்றும் நீண்ட கால பராமரிப்புத்துறை அமைப்பின் கூற்றின்படி ஒவ்வொரு வருடமும் ஏறத்தாழ 13,000 பேர் ஒன்ராரியோவில் புகைபிடிப்பதனால் உயிர் இழக்கின்றார்கள். இது ஏறத்தாழ நாளாந்தம் 36 பேர் என்பதற்கு சமனாகும். புகையற்ற ஒன்ராரியோ விதிமுறையானது மூடப்பட்டுள்ள பொது இடங்கள் தொழிற் கூடங்களில் புகைப்பிடிப்பதைத் தடுப்பதோடு அங்கு வேலை பார்க்கும் நபர்கள் இரண்டாம் கட்ட புகையினால் பாதிப்புறுவதையும் தவிர்க்கின்றது. மேலும் புதிய விதிமுறைகள் புகையிலை விற்பவர்கள்இ வாங்குபவர்களுக்கான வயதெல்லை மற்றும் புகையிலையினால் ஏற்படும் சுகாதார சீர்கேடுகள் பற்றிய தகவல்கள் விளக்கமாக காட்சிப்படுத்த வேண்டும் என்று கூறுகின்றது. உள்ளூர் பொது சுகாதார குழுக்கள் ஆய்வுகளையும் பரிசோதனைகளையும் மேற்கொண்டு இவ்விதிகளை நடைமுறைப் படுத்த உதவுகின்றன.

## புகைபிடித்தல் — சட்டவிதிகள்

பற்ற வைக்கப்பட்ட புகையிலையை எந்தவொரு வடிவத்திலும் ஒன்ராரியோவின் எந்த பொதுவான மூடப்பட்ட இடத்திலோ அல்லது பொதுவான எந்தவொரு புகை தடை செய்யப்பட்ட இடங்களிலோ பாவித்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

இவ்விதமாக தடை செய்யப்பட்டுள்ள எந்தவொரு இடத்திலாவது நீங்கள் புகைபிடித்தால் அல்லது பற்ற வைக்கப்பட்ட புகையிலையை கையில் வைத்திருந்தல் நீங்கள் தண்டனைக்குள்ளாவீர்கள்.

கீழ்க்காணும் இடங்களில் புகைப்பது சட்ட விரோதமாகும்.

- வெளிப்புற திண்ணை மேடைகள், உணவக மற்றும் மதுபான நிலையங்கள் காணப்படும் வெளிப்புற திண்ணை மேடைகள் அடங்கலாக.
- பிள்ளைப் பராமரிப்பு மற்றும் இளவயது சட்டக் கோவையின் உரிமம் பெற்ற பிள்ளைப் பராமரிப்பு நிலையங்கள்.
- 16 வயதுக்குப்பட்ட பிள்ளைகளைக் கொண்ட வாகனங்களில் (இவ்வித இயங்கிக் கொண்டிருக்கும் மற்றும் இயக்க மற்ற நிலை உள்ள வாகனங்களுக்கும் பொருந்தும்) வாகனத்தின் கதவுகள், யன்னல்கள், மேல் சூரியத் துவாரம் மேற் கூரை இவைகள் திறந்திருந்தாலும் இவ்விதி பொருந்தும்.
- மூடிய நிலையிலுள்ள தொழிற் கூடங்கள் வேலை நேரம் வேலையற்ற நேரம் இரண்டிலும்
- பொதுவான தனிப்பட்ட மனநல வைத்திய சாலைகளின் எந்த வொரு வரும் வழி வெளிச்செல்லும் வழிகளின் 9 மீற்றர் விட்டமுள்ள பகுதிகள்.
- பாடசாலைகளின் உள் மற்றும் வெளிப்பகுதிகள் விளையாட்டு மைதானங்கள் மற்றும் தடகளப் பிரதேசங்கள் அடங்கலாக.
- சிறுவர் விளையாட்டு மைதானங்கள் பொது விளையாட்டு அரங்குகள். இவைகளின் 20 மீற்றர் விட்டமுள்ள பகுதிகளும் (உ+ம்: கூடைப்பந்து, அடிப்பந்து, காற்பந்து மற்றும் கடற்கரை வலைப்பந்தாட்ட திடங்கள் மாநகர, மாகாண உயர் கல்வி நிறுவனங்களால் நிர்வகிக்கப்படும் பனிச்சறுக்கு மேடைகள் வரிப்பந்தாட்ட திடல்கள் தெறி பலகை மற்றும் நீச்சல் தடாகங்கள்.
- அடுக்கு மாடிக் குடியிருப்புகள் மற்றும் தொடர்மாடி விடுகள், பல்கழகக்கழக கல்லூரிகள் பொதுவான பிரதேசங்கள் இடங்கள்.

## புகையிலை விற்பனை

ஒருவர் புகையிலைத் தயாரிப்புக்களை, இலத்திரனியல் சிகரெட்டுகள், அல்லது புகையிலைக் கூட்டுப் பொருட்களை வாங்குவதற்கு அதிகபட்சம் 19 வயதை அடைந்தவராக இருத்தல் வேண்டும். புகையிலை விற்பவர் ஒருவரைப் பார்வையிடுகையில் அவர் 25 வயதிற்குட்பட்ட தோற்றமுடையவராக இருந்தால் அவரை 19 வயதை அடைந்தவர் என ஆவணப்படுத்தும் அடையாளத்தைக் கோரலாம்.

புகையிலையை விற்பதற்கு எந்த வயது வரம்பும் இல்லை. ஆனாலும் தொழில்சார் சுகாதார மற்றும் பாதுகாப்புச்சட்டத்தின் கீழ் தொழில் அமைச்சானது ஒன்ராரியோ வேலைத்தளங்களில் வேலைக்கமர்த்தும் வயது வரம்பை 14 ஆக்கியுள்ளது. இதன் பிரகாரம் 14 வயதிக்குட்பட்ட எந்த நபரும் புகையிலை விற்பனையில் ஈடுபடலாகாது.

பல்கலைக்கழக மற்றும் கல்லூரி வளாகங்களில் புகையில விற்பனை சட்ட விரோதமானதாகும்.

## பொதுக் கல்விச்சாலைகள்

ஒன்ராரியோவில் எல்லாப் பிள்ளைகளுக்கும் கல்வி கட்டாயம் என கல்விச் சட்டம் கூறுகின்றது. 6 வயதை அடைந்த எந்தவொரு பிள்ளையும் பாடசாலை செல்ல வேண்டியது அவசியமாகின்றது. ஆனால் அநேகமான பிள்ளைகள் கல்வி நடவடிக்கைகளை 4 அல்லது 5 வயதில் முன்பள்ளிகளுடாக ஆரம்பித்து விடுகின்றனர்.

எப்பாடசாலையாவது பிள்ளையின் பெற்றோரைக் கீழ்க்காணும் காரணங்களின் நிமித்தம் பிள்ளையின் அனுமதியை நிராகரிக்க முடியாது.

— குடிவரவு அத்தாட்சி அல்லது அவர்களின் அந்தஸ்து விண்ணப்ப நிலை அத்தாட்சிகள்.

— வேலை அனுமதி அல்லது சமூகக் காப்புறுதி எண்.

— ஒன்ராரியே சுகாதாரக் காப்புறுதி நிகழ்ச்சித் திட்டம் (OHIP)

ஒன்ராரியோவில் உள்ள எந்தவொரு 6 முதல் 18 வயது வரையுள்ள நபருக்கு ஒன்ராரியோ பாடசாலைகளில் அனுமதி பெரும் உரிமை உண்டு. அத்துடன் அவர்களின் பெற்றோருடைய பாதுகாவலருடைய சட்டவிரோதமான வசிப்பு நிலை அல்லது வரவு நிலையைக் காட்டி நிராகரிக்க முடியாது.

இடைநிலைக் கல்வியின் பின்

கனடாவில் பல்கலைக் கழகங்கள் உட்பட எல்லா கல்வி நிலைகளும் அந்தந்த மாகாண மற்றும் பிரதேச நிர்வாகங்களின் கீழேயே உள்ளன. ஆதலால் அந்தந்த மாகாணங்கள் இவற்றின் தரங்களையும் நிலைகளையும் வரையறுக்கின்றன.

கல்வி நிறுவனங்களின் வகைகள்.

பல தரப்பட்ட கல்வி நிறுவனங்கள் எல்லா மாகாணங்களிலும் பல்கலைக் கழகங்கள் உள்ளடங்கலாக உள்ளன. அத்துடன் நீங்கள் விரும்பிய பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பிக்க முடியும். நீங்கள் ஏதாவது ஓர் குறிப்பிட்ட தொழிற் துறையில் கல்வி பயில விரும்பினால் நிங்கள் தொழில்நுட்ப அல்லது சமூக கல்லுாரிகள் நாடலாம். அல்லது இவற்றில் பெற்ற புள்ளி ஆவணங்கள் பல்கலைக் கழகங்களுக்கு சமர்ப்பிப்பதன் முலம் பட்டதாரியாகவும் கல்வியைத் தொடரலம்.

நிலையற்ற குடிவரவு அந்தஸ்துள்ள நிகழ்ச்சித் திட்டத்தில் இருக்கும் மாணவருக்கான கற்கை வழிகள்.

இம்மாதியான நிலையில் இருக்கும் மாணவர்கள் குறிப்பாக அந்தஸ்து முதலான தடைகளை எதிர் நோக்கியுள்ளவர்களுக்கு கனடாவில் உயர் கல்வியை தொடர்வதற்கு வழிகள் உள்ளன. ஒன்ராரியோவில் உள்ள FCJ அகதிகளுக்கான நிலையம் (http://www.fcjrefugeecentre.org) இம்மாதிரியான நிகழ்ச்சித்திட்டத்தை முன்னிலைப்படுத்துவதில் உதாரணமாகத் நிகழ்கின்றது.

யோர்க் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறை இவ்வகை அந்தஸ்துள்ள மாணவர்களுக்கான இணைப்பு கல்வியாண்டுக்கான பயிற்சி நெறியை ஒழுங்கு செய்துள்ளது.

ஒன்ராரியோவில் எல்லாப் பிள்ளைகளுக்கும் கல்வி கட்டாயம் என கல்விச் சட்டம் கூறுகின்றது.
நீங்கள் இப்படியொரு அந்தஸ்துள்ள நிலைமையைக் கொண்டிருப்பீர்களேயானல் யோர்க் பல்கலைக்கழகத்தின் இந்நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கு கொள்ள முடியும்.

இப்பாடநெறியானது குடிவரவு தொடர்பான கல்வியின் அறிமுகம் மற்றும் கருத்துக்கள் போன்றவற்றைக் தருவதுடன் மாணவர்களின் வாசித்தல், எழுதுதல், பேசுதல் தொடர்பான ஆய்வுத்திறனை மேம்படுத்த உதவுகின்றது. இக் கற்கை நெறியானது மத்திய தர “B” புள்ளிகளை எட்டுவதற்கு பதிலாக கிலென்டென் கல்லூரியின் கல்விக்கலை அல்லது தொழில்சார் கல்விக்கலை ஆகியவற்றை பயில உதவுவதோடு மேலும் பல துறைகளில் தெரிவு செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களிலும் பங்கு கொள்ள உதவுகின்றது.

# தொழில் வாய்ப்பு

## அகதி புகலிட கோரிக்கை

நீங்கள் ஓர் அகதி புகலிட கோரிக்கையினை கனடாவில் கோரியிருந்தாலோ அல்லது குடிவரவு மற்றும் கனேடிய அகதிகள் சபையின் அகதிகள் பாதுகாப்பு பிரிவின் (RPD) முடிவிற்காக காத்திருந்தாலோ உங்கள் அடிப்படை தேவைகளைச் சந்திக்க ஓர் வேலை தேவை என்ற முடிவில் உங்களுக்கு வேலைக்கான அனுமதி தரப்படலாம். இவ் வேலை அனுமதி சில எதிர்பார்ப்புக்கள் மற்றும் பொது தகுதி அடிப்படையிலேயே தரப்படும். இவைகளை ஓர் வழக்கறிஞரின் உதவியுடன் நாடுவது நல்லது. அத்துடன் மேலதிக விபரங்களை இந்நூலின் சட்ட உதவி சேவைகள் என்ற தலைப்பின் கீழ் காண்க. உங்கள் விண்ணப்பத்தில் உங்கள் கணவன் மனைவி அல்லது கூடி வாழும் துணைவர் உங்களில் தங்கி வாழும் பிள்ளைகள் அவர்களின் பிள்ளைகள் போன்றோரையும் உள்ளடக்கலாம்.

அகதிகள் பாதுகாப்பு பிரிவின் (**RPD**) அகதி புகலிட கோரிக்கையின் நிராகரிப்புக்குப் பின்னும் நீங்களும் உங்கள் குடும்பமும் இந்த வேலைக்கான அனுமதியை கொண்டிருக்க தகுதியுடையவர்களாவீர்கள் அத்துடன்.

— உங்கள் கட்டுப்பாட்டில் இல்லாத விடயங்கள் உங்களை ஆளாதவரைக்கும் உங்களை கனடாவிலிருந்து வெளியேற்ற முடியாது.
— உங்கள் அடிப்படை தேவைகளைச் சந்திக்க உங்களுக்கு ஓர் வேலை கட்டாயம் தேவை

## மாகாண தொழில் முறைமைகள்

ஒன்ராரியோ தொழில் விதிகளின் படி இம்மாகணத்தில் இயங்கும் தொழில்களுக்கு உரிமைகளும் பொறுப்புகளும் உண்டு. பொது விடுமுறைகள் வேலை நேரம் ஊதியத்திற்கான குறைந்தபட்ச தராதரங்கள் என்பவை இவற்றில் அடங்கும்.

உங்களுடைய குடிவரவு அந்தஸ்தைப் பொறுத்து நீங்கள் வேலை பார்க்கும் தலத்தில் உங்கள் உரிமைகள் சம்பளம் அமைவதில்லை. உங்களிடம் தகுதி வாய்ந்த “சமூக காப்புறுதி இலக்கம்” மற்றும் வேலைக்கான அனுமதி இல்லாவிட்டாலும்

நீங்கள் தொழில் வாய்ப்புத் தரம், மருந்து, பாதுகாப்பு, மனித உரிமை. காப்புறுதிச் சபையின் வேலைத்தளப் பாதுகாப்பு (WSIB) எனப்படும் தொழில் தொடர்பான சங்கங்களின் பாதுகாப்புக்கு உட்பட்டவர்களாவீர்கள்.

நீங்கள் ஓர் அந்தஸ்தந்த இளைஞராக விருந்து உங்கள் தொழில் தருனரினால் உங்கள் ஊதியம் தரப்படாதவிடத்து உங்களுக்குரிய சம்பளத்தைக் கோரும் உரிமை உங்களுக்கு உண்டு. அத்துடன் நீங்கள் வேலை செய்யுமிடத்தில் இயந்திரங்களை கையாளுபவாரக இருந்தால் அதற்குரிய சகல பாதுகாப்பையும் தருவது உங்கள் நிறுவனத்தின் கடமையாகும். அப்படி தராதவிடத்தில் உங்கள் நிறுவனம் அவ் ஒழுங்குகளை மீறுகின்றது. இவ்விதமாக நீங்கள் ஏதும் சவால்களை சந்திக்க நேர்ந்தால் சட்ட ஆலோசனையை நீங்கள் நாடலாம். இச்சம்பந்தமான சட்ட ஆலோசனை மையங்கள் உள்ளன. நீங்கள் உதவிக்காக இவைகளை நாடலாம் மற்றும் இவைகளடங்கிய விபரங்கள் இந்நூலின் இறுதிப் பகுதியில் தரப்பட்டுள்ளது.

ஒன்ராரியோவின் கானப்படும் குறைந்த ஊதிய அளவு.

*2018*ம் ஆண்டு தை மாதம் *1*ம் திகதியின் படி குறைந்தளவு ஊதியம் (மணித்தியாலத்திற்கு) :

| | பொது | மதுபானம் பரிமாறுபார் | மாணவர் (*18* வயது உட்பட்டவர்) |
|---|---|---|---|
| தை. *1. 2018* | $14 | $12.20 | $13.15 |
| தை. *1. 2019* | $15 | $13.05 | $14.10 |
| ஐப்பசி. *1. 2019* அதன்பின் வரும் ஒவ்வொரு வருடங்களுக்கும் | $15 + வாழ்க்கைச் செலவுப்படி திருத்தங்களுடன் | $13.05 + வாழ்க்கைச் செலவுப்படி திருத்தங்களுடன் | $14.10 + வாழ்க்கைச் செலவுப்படி திருத்தங்களுடன் |

நீங்கள் வேலை செய்யும் ஒவ்வொரு மணித்தியாலங்களுக்கும் உங்களுக்கு ஆகக்குறைந்தது குறைந்த பட்ச ஊதியம் வழங்கப்படல் வேண்டும். குறைந்த பட்ச ஊதிய விதிகளில் சில விதி விலக்குகள் உண்டு

வேலை செய்யும் மணி நேரம்

தினசரி மணித்தியாலங்கள்
நீங்கள் ஒரு நாளில் 8 மணித்தியாலங்களுக்கு மேல் வேலை செய்ய வேண்டியதில்லை அல்லது உங்கள் வழக்கமான வேலை நேரம் நாளொன்றுக்கு 8 மணித்தியாலங்களாக இருந்தாலும் அது 13 மணித்தியாலங்களுக்கு மேல் இருக்கக்கூடாது.

மேலதிக வேலை நேரம்
உங்கள் நிறுவனம் உங்கள் நாளாந்த வேலை நேரத்தை விட மேலதிகமாக வேலை செய்யக் கேட்கும் பட்சத்தில் உங்கள் எழுத்து மூல அனுமதியை அவர்கள் பெற வேண்டும் (அவசர நிலைமையில் இது பொருந்தாது) ஓர் கையொப்பத்துடன் கூடிய ஒப்பந்தத்தின் மூலமாக.

உணவு நேர இடைவேளைகள்
ஒவ்வொரு 5மணிநேர வேலையின் போதும் உங்களுக்கு 30நிமிட
இடைவேளை பெறும் தகமை உள்ளது. இவ் இடைவேளை ஊதியத்துடனா அல்லது ஊதியமின்மையுடனா என்பதை உங்களுடைய தொழில் ஒப்பந்தமே முடிவு செய்யும்.
மிகுதி நேரம்
நீங்கள் ஒரு வாரத்திற்கு 44 மணித்தியாலங்களுக்கு மேல் வேலை செய்யும் போது உபரி மணித்தியாலங்களுக்கு மிகுதி நேர கொடுப்பனவுக்கு தகைமை உள்ளவர்களாகின்றனர். இம்மிகுதி நேர கொடுப்பனவு உங்கள் வழக்கமான ஊதியத்தின் 1.5 மடங்காகும் உதாரணமாக உங்கள் வழக்கமான ஊதியம் மணித்தியாலத்திற்கு $20 ஆனால் 44 மணித்தியாலங்களில் பின்வரும் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் $30 என்ற அடிப்படையில் இருக்கும்.

பொது விடுமுறை தினங்களும் அவற்றிற்கான கொடுப்பனவுகளும்
ஒன்ராரியோவில் காணப்படும் பொது விடுமுறை தினங்களாவன:
புது வருடம், குடும்பதினம், புனித வெள்ளி, விக்டோரியா தினம், கனடா தினம், தொழிலாளர் தினம், நன்றி நவிலும் தினம், கிறிஸ்மஸ் தினம், பரிசுகள் அளிக்கும் நாள். அநேகமானவர்கள் இந்நாட்களில் பொது விடுமுறை ஊதியத்துடன் கூடிய விடுப்புக்கு அனுமதியுள்ளவர்களாக இருக்கின்றார்கள். அல்லது ஆவணப்படுத்தப்பட்ட ஓர் கடிதத்துடன் பிறிதொரு விடுமுறை நாளை இந்நாளுக்குப் பதிலாக உபயோகித்து அதற்குரிய ஊதியத்தைப் பெறலாம்.

குடும்ப மற்றும் பாலியல் வன்முறை தொடர்பான விடுப்பு

இவ் வகையான விடுப்பு அல்லது விடுமுறை ஊழியர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு அவர்கள் அல்லது அவர்களின் பிள்ளைகள் இவ்வகை வன்முறைகளுக்கு ஆளாகும் போது இவ்விடுப்பை அவர்கள் பாவிக்க உதவுகின்றது.

இந்த வகை விடுப்புக்கு நீங்கள் ஏதுவாக வேண்டு மென்றால் உங்கள் வேலை தருநரோடு ஆகக் குறைந்தது 13 வாரங்கள் வேலை செய்திருக்க வேண்டும். ஊழியர்களோ அல்லது அவர்களின் பிள்ளைகளே வன்முறைகளுக்கு ஆளாகும் போது அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் போதோ 10 நாட்களையும் ஆகக் கூடிய அளவாக 15 வாரங்கள் வரை விடுமுறை பெற்றுக் கொள்ளலாம்.

நாட்காட்டி வருடத்தின் முதல் 5 விடுமுறை தினங்களையும் சம்பளத்துடனும் மிகுதியான தினங்கள் சம்பள மற்ற முறையிலும் வழங்கப்படும் உங்கள் வேலை தருனருக்கு இவ் விடுமுறைக்கான தகுந்த அத்தாட்சியை சமர்ப்பிக்க நீங்கள் கடமைப் பட்டுள்ளீர்கள்.

வேலைத்தளப் பாதுகாப்பு

ஒன்ராரியோவின் பணிபுரியும் அனைத்து ஊழியர்களும் அநேகமாக “ஒன்ராரியோ தொழில்சார் சுகாதார மற்றும் பாதுகாப்பு” (OHSA) விதியின் கீழ் பாதுகாக்கப்பட்டவர்களாகவே இருப்பார்.

இவ் விதிக் கோவையானது, நீங்கள் இடர் விளைவிக்கக் கூடிய இரசாயனங்களுடன் அல்லது பாரதூரமான பொருட்களுடன் பணியாற்றுபவராக இருந்தால் அவைகளை எவ்விதம் கையாள வேண்டும் என்ற பயிற்சியையும் அவைகள் சுகாதாரம் தொடர்பாக எவ்வகை விளைவுகளை ஏற்படுத்தும் என்பதையும் உங்களுக்கு தெரிவித்திருக்க வேண்டும்.

இது தொடர்பான உங்கள் சந்தேகங்களை உரிமைகளைக் கேட்கும் போது உங்கள் வேலை தருநர் உங்களை வேலையிலிருந்து நீக்கினால் அது சட்ட விரோதமாகும்

நீங்கள் உடற் காயத்திற்கு அல்லது தீவிர ஆரோக்கிய சீர்கேட்டுக்கு உள்ளாகும் போது உங்கள் நிறுவனம் உங்களை வேலை நீக்கம் செய்ய முடியாது இவ்விதம் அவர்கள் உங்களை சரியான காரணமின்றி வேலை நீக்கம் செய்யமுறப்பட்டால் நீங்கள் மனித உரிமை முறைப்பாட்டை மேற் கொள்ளலாம்

# வீட்டு வசதி

ஓர் இருப்பிடத்தை வாடகைக்கு அமர்த்துதல்?

நீங்கள் ஓர் அகதி இளையோராக இருப்பினும் ஒன்ராரியோ மாகாணத்தில் உங்களுக்கு ஓர் வாடகை வீடு தேவைப்படும் போது மற்றய எல்லோரையும் போல எவ்வித பாகுபாடுமின்றி தரமான மற்றும் உங்களால் தாங்கத்தக்க வாடகையுடனும், வசதிகளுடனும் கூடிய ஓர் வீட்டை பெற உங்களுக்கு முழு உரிமையும் உண்டு. ஒன்ராரியோ மனித உரிமைகள் விதிக் கோவையின் கீழ் உங்களுக்குரிய ஓர் வீட்டைத் தேடும் போது எந்தப் பாகுபாடும் காட்டப்படுவதை ஏற்க முடியாது என்பதை காண்கின்றோம். (இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு "உங்கள் உரிமைகளை அறிந்து கொள்ளுங்கள்" என்ற அத்தியாயத்தைப் பாருங்கள்.)

ஓர் வீட்டின் உரிமையாளர் உங்களின் இன அடிப்படை பால்நிலை ஈடுபாடு மதம் வயது மற்றும் சமூக உதவி சிட்டை ஆகியவற்றின் அடிப்படையில் உங்களுக்கு வீடு தர மறுப்பாரேயானல் அவருக்கெதிராக ஒன்ராரியோ மனித உரிமைத் தீர்ப்பாயத்தில் முறையிட உங்களுக்கு உரிமை உண்டு.

ஓர் விட்டை வாடகைக்கு அமர்த்தும் போது நீங்கள் அறிந்து கொள்ளவேண்டிய உங்கள் உரிமைகள்

வீட்டு உரிமையாளர்கள் உங்களிடம் கேட்கக் கூடியவை?

1. கடன் தொடர்பான வரலாறு. இதற்கும் உங்கள் அனுமதியைப் பெற வேண்டும்.
2. உங்கள் முந்தைய வாடகை வீடு தொடர்பான விபரங்கள்.
3. உங்கள் வருமானம் தொடர்பான அத்தாட்சி (கடன் விபரங்கள் மற்றும் கடன் தொடர்பான வரலாறு)
4. ஒரு மாத வாடகையை வைப்புத் தொகையாகக் கோரல். இது கடை—சி மாத வாடகையாகக் கருதப்படும். வேறு எவ்வகை வைப்புத் தொகையும் சட்ட விரோதமாகவே கருதப்படும். சேதக் தொகைக்கான இழப்பீட்டு வைப்புத் தொகை ஏற்றுக்கொள்ளக்கூடியதாகும்.
5. ஓர் பிணையாளரை (உ+ம் : பெற்றோர் அல்லது நண்பர்) நியமித்து அவர் மூலமாக வாடகையை உறுதிப்படுத்தலாம்.

நீங்கள் வாடகையை செலுத்தாதவிடத்து பிணையாளரே இதற்கு பொறுப்பாவார்.

இவைகள் அனைத்தும் உரிய முறையிலும் உங்களின் இன அடிப்படை பால்நிலை ஈடுபாடு மதம் வயது மற்றும் சமூக உதவி சிட்டை ஆகியவற்றின் அடிப்படையில் இல்லாது ஓர் பாரபட்சமற்ற முறையிலும் இருத்தல் வேண்டும். உங்களிடம் ஓர்

உறுதியான வரலாறு இல்லையென்பது நிராகரிப்புக்கான காரணமல்ல.

வீட்டு உரிமையாளர்கள் உங்களிடம் கேட்க முடியாதவை.

1. உங்களது (SIN) சமூக காப்புறுதி இலக்கம். (உங்கள் கடன் வரலாற்றை வீட்டு உரிமையாளர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமாயின் உங்கள் பெயர் விலாசம் பிறந்த திகதி இவைகளை மட்டுமே கேட்க முடியும்.
2. உங்கள் வருமானத்தின் ஆதாரங்கள் (வேலை செய்யும் இடம் வருமானம் பெறும் இடம் பற்றிய தகவல்கள்)
3. ஒரு மாத வாடகைக்கு மேலான பாதுகாப்பு வைப்புத் தொகை.
4. மேலதிக தகவல்கள் உங்கள் வயது இனப்பின்னணி திருமண நிலை.
5. உங்கள் பிள்ளைகள் பற்றிய தகவல்கள் பிள்ளைகளின் எண்ணிக்கை.
6. பின் தேதியிட்ட காசோலைகள் கோரல். உங்கள் சமுக உதவிப்பணம் அல்லது வேறு வருமானங்களிலிருந்து நேரடியான வைப்பீட்டுக்காகக் கோரல்.
7. குற்றப்பின்னணிக்கான ஆராய்தல் (முக்கிய காரணங்களின்றி)

வாடகைக்கான குறைந்த பட்ச வயது வரம்பு

ஒன்ராரியோவில் *16* அல்லது *17* வயதுடைய இளையோர் அவர்களுக்குரிய தங்குமிடத்தைத் தேர்ந்தெடுக்கும் உரிமை உள்ளது. அவர்கள் பெற்றோரின் பராமரிப்பில் இல்லாத போதும் கூஅவர்களுக்கு இவ்வுரிமை உள்ளது.
*16* வயதை அடைந்தவரும் அல்லது அதற்கு மேலான ஒருவருக்கும் தனக்கும் ஓர் சட்டபூர்வ பராமரிப்பாளர் தேவையில்லை என்பதையும் தான் எங்கு தங்க வேண்டும் என்பதையும் தானே தீர்மானிக்க முடியும். நீங்கள் *16* வயதிற்கு குறைந்தவராக இருக்கும் தருணத்தில் அல்லது வீட்டிலிருந்து வெளியேறும் வயது *18* ஆக உள்ள ஓர் மாகாணத்தில் நீங்கள் அல்லது பெற்றோர் வசிக்கும் போது உங்கள் பெற்றோர் நீங்கள் வசிக்கும் இடம் பாதுகாப்பில்லை என்பதை உணர்ந்தால் அவர்கள் பொலிசாரை அழைத்து உங்களை மீண்டும் வீட்டிற்கு வர வழைக்கலாம். உதாரணமாக நீங்கள் வசிக்கும் இடம் உடல் ரீதியான உணர்வு ரீதியான அல்லது பாலியல் துன்புறுத்தலுக்கு ஏதுவாகக் கூடிய பாதுகாப்பற்ற தன்மையைக் கொண்டிருக்குமானால்.



நீங்கள் ஓர் அகதி இளையோராக இருப்பினும் ஒன்ராரியோ மாகாணத்தில் உங்களுக்கு ஓர் வாடகை வீடு தேவைப்படும் போது மற்றய எல்லோரையும் போல எவ்வித பாகுபாடுமின்றி தரமான மற்றும் உங்களால் தாங்கத்தக்க வாடகையுடனும், வசதிகளுடனும் கூடிய ஓர் வீட்டை பெற உங்களுக்கு முழு உரிமையும் உண்டு.

## குடியிருக்கும் உரிமையும் வெளியேற்றப்படுதலும்.

ஒன்ராரியோவின் குடியிருப்பு உரிமைச் சட்டமே இவ்விதமாக தங்குமிட குடியிருக்கும் உரிமையும் வெளியேற்றப்படுதலையும் உள்ளடக்கியுள்ளதக இருக்கின்றது. இவ் உரிமைச் சட்டத்தின் படி உங்கள் வாடகைக் குடியிருப்பு ஓர் தொடர் மாடியிலோ வீடாகவோ அறையாகவோ அல்லது உணவு வசதியுடன் கூடிய ஓர் அறையாகவோ இருக்கலாம். பாமரிப்பு இல்லங்கள் ஒய்வுக்கான இல்லங்கள் நடமாடும் வீடுகள் நிலக்குத்தகை ஆகியவற்றில் அமையப் பெற்றுள்ள தங்குமிடங்களிற்கும் இவ் விதி பொருந்தும்.

இனி இந்தச் சட்டத்தின் கீழ் சில விதிகள் பொருந்தாத தங்குமிடங்களைப் பார்ப்போம். இலாப நோக்கற்ற அல்லது பொது மண்டபங்களின் தங்குமிடங்கள் பல்கலைக்கழக கல்லூரி விடுதிகள் அத்துடன் நீங்கள் மாத்திரம் உங்கள் வீட்டு உரிமையாளரின் சமையலறை, குளியலறை வசதிகளைப் பயன்படுத்தும் போதும்.

உங்கள் சொந்த விருப்பின்றி உங்கள் விட்டு உரிமையாளர் ஓர் ஒழுங்கற்ற முறையான நடைமுறையில்லமல் உங்கள் நடுத்தெருவுக்கு அனுப்ப முடியாது. குடியிருப்பாளர் சபையின் விதிகள் பின்பற்றப்படல் வேண்டும். எழுத்து மூலமான கடிதத்தின் ஊடாக இச்சபையின் விதிகளின் படிக் கூறப்பட்ட காரணங்களின்படியே குடியிருப்பாளர் வெளியேற்றப்பட முடியும். அத்துடன் உரிமையாளர் மற்றும் குடியிருப்பாளர் சபையின் கவனத்திற்கு கொண்டு வருதலும் அவசியம். உரிமையாளர் மற்றும் குடியிருப்பாளர் சபையின் முன் உங்கள் வாதத்தை வைப்பதற்கு உங்களுக்கு உரிமை உண்டு.
உரிமையாளர் மற்றும் குடியிருப்பாளர் மற்றும் சபை உங்களை வெளியேற்றக்கூடிய முக்கிய காரணங்கள் :

- வாடகை தராமை: குடியிருப்பாளர் வெளியேற்றப்படுவதற்கு முக்கிய காரணம் வாடகை தராமையும் வாடகை கொடுப்பதில் காணப்படும் ஒழுங்கின்மையுமே காரணம். வாடகை பாக்கியிருப்பதும் குடியிருப்பாளரை உரிமையாளர் மற்றும் சபை வெளியேற்றக்கூடிய முக்கிய காரணமாகும்.
- வாடகை தருவதில் தொடர்ச்சியான தாமதம்: ஒரு சில சந்தர்ப்பங்களில் வாடகை தாமதம் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் தொடர்ச்சியாக குடியிருப்பாளர் இவைகளை அனுமதிக்க முடியாத. ஆனாலும் சில சந்தர்ப்பங்களில் சில பிரத்தியேக சந்தர்ப்பங்களில் உரிமையாளரும் சபையும் கலந்து பேசி முடிவெடுக்க முடியும்
- மற்ற குடியிருப்பாளர்களுக்கும் வீட்டு உரிமையாளருக்கும் தொந்தரவு தருவது உதாரணமாக மிகுந்த சத்தமிடுவது பின்னிரவு களியாட்டங்கள்.
- உடமைகளுக்கு சேதம் விளைவித்தல் அளவுக்கு மீறிய பொருட் சேதங்களை விளைவித்தல்

- குடியிருப்பில், தங்குமிடத்தில் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுதல்ஹ உதாரணமாக போதைப் பொருட்களின் விநியோகம்.
- கட்டடத்தில் உள்ள மற்றய நபர்களின் பாதுகாப்புக்கு அதி உச்ச பங்கத்தை விளைவிப்பது உதாரணமாக தீப்பற்றக்கூடிய நடவடிக்கைகளில் ஈடுபடுவது
- அளவுக்கு அதிகமான நபர்களை தங்குமிடத்தில் அமர்த்துவது
- அத்துடன் தங்கும் காரணத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வேறு காரியங்களைச் செய்வது, பாரிய திருத்த வேலைகளை மேற்கொள்வதும் வீட்டு உரிமையாளர் உங்களை வெளியேற்ற காரணமாகலாம் ஆனால் உரிமையாளர் இவைகளை முறையான சட்ட நடவடிக்கையின் மூலம் மாத்திரம் மேற் கொள்ளலாம்.

வீட்டு உரிமையாளர்கள் எப்போதும் கடுமையான வெளியேற்றலுக்கெதிரான விதி—முறைகளைக் கைக்கொள்ளவேண்டியிருக்கும். சில வேளைகளில் குடியிருப்பாளருக்கு வீட்டு உரிமையாளர் நட்ட ஈடு தரவும் வேண்டியுமிருக்கும். உரிமையாளரும் சபையும் குடியிருப்பாளரின் வெளியேற்றலுக்கெதிரான கோரிக்கையையை நிராகரிக்கலாம். உண்மையான காரணங்களை உறுதிப்படுத்தாதவிடத்துஇ
விண்ணப்ப படிவங்கள் பிழையாக நிரப்பப்பட்டுள்ளபோது அல்லது வெளியேற்றத்தினால் குடியிருப்பாளரின் நிலைமை மோசமாகும் என்று கருதும் போது.

வீட்டு உரிமையாளர்கள் மற்றும் சபையிடமிருந்து அறிவித்தல் ஏதாவது வருமாயிருந்தால் அருகிலுள்ள உள்ளூர் சமூக சட்ட நிலையத்தை நாடுங்கள். **www.legalaid.on.ca**

## இடைக்கால தேசிய சுகாதார நிழ்ச்சித் திட்டம் (அகதிகள்)

இடைக்கால தேசிய சுகாதார நிழ்ச்சித் திட்டமானது (அகதிகள்) (IFHP) எதுவ—ித மாகாண மற்றும் பிரதேச சுகாதாரக் காப்புறுத்திக்குள் வராதவர்களுக்குமான கீழ்க் காணும் பிரிவினருக்கான தற்காலிக சுகாதார நலன்களை வழங்குவதற்காக உருவாக்கப்பட்டதாகும்

— கனடாவில் ( பாதுகாக்கப்பட்ட) பாதுகாப்பைக் கோரியவர்கள்

— மீள்குடியேற்றப்பட்ட அகதிகள்

— அகதி அந்தஸ்துக் கோருபவர்கள்

— குடிவரவு மற்றும் பாதுகாப்பு சட்டங்களின் கீழ் தடுத்து வைக்கப்படுள்ளவர்கள் (தடுப்பிலிருக்கும் போது)

— ஆட்கடத்தலினால் பாதிக்கப்பட்டவர்கள்

இடைக்கால தேசிய சுகாதார நிகழ்ச்சித் திட்டமானது (IFHP) மாகாண மற்றும் பிரதேசங்களில் காணப்படும் சுகாதார காப்புறுதி போன்ற ஓர் அடிப்படை நன்மைகளைக் கொண்டதாகும்.

— உள் மற்றும் வெளீ நோயாளர் வைத்தியசாலைச் சேவை.

— மருத்துவர், பதிவு செய்யப்பட்ட தாதிச் சேவை, மற்றய கனேடிய அங்கீகாரம் பெற்ற தொழில்சார் மருத்துவ நிபுணர்களின் சேவை. பிரசவத்திற்கு முன்னான மற்றும் பின்னான சேவைகள்.

— ஆய்வுகூட, நோயியல்முறை அவசர ஊர்திச் சேவைகள்

குறைநிரப்பு (நிறைவாக்கல்) சேவைகள்

— மட்டுப்படுத்தப்பட்ட பார்வைப் புலன் மற்றும் அவசர பல் மருத்துவ சேவைகள்

— இல்லப் பராமரிப்பு மற்றும் நீண்ட கால பராமரிப்பு சேவைகள்

— உளவியல் நிபுணத்தும், உளவளவாளர், கருத்துரை, வழஙகல்

- தொழில்முறை பயிற்சியாளர், பேச்சுப் பயிற்ச்சியாளர், உடலியல் செயற்பாட்டாளர் ஆகிய மருத்துவ பராமரிப்புகளும் அதனுடன் இணைந்த சேவைகளும்.
- உதவுகின்ற கருவிகள் மருத்துவ வழங்கல் மற்றும் உபகரணங்கள் (உதாரணம்)
- எலும்பியல் மற்றும் சீரமைப்பு சாதனங்கள்
- இடம்பெயர் உதவிச் சாதனங்கள்
- செவிப்புலன் கருவிகள்
- நீரிழிவு வழங்கல் மற்றும் கருவிகள்
- கட்டுப்பாட்டிழப்பு சாதனங்கள்
- ஒட்சிசன் கருவிகள்

# Resources

## Legal Services

Toronto – Refugee Law Office
20 Dundas St West Suite 202,
Toronto M5G 2H1
416-977-8111
http://www.legalaid.on.ca/en/contact/contact.asp?type=refugee
* Services are available in French at this location

Legal Aid Ontario
Telephone
Toronto: 416-979-1446
Toll free: 1-800-668-8258
TTY (Telephone device for the hearing impaired)
Toronto: 416-598-8867
Toll free: 1-866-641-8867
Fax: (416) 979-8669
www.legalaid.on.ca
Email: info@lao.on.ca
* A legal information resource from legal aid Ontario: http://lawfacts.ca/refugee

Pro Bono Ontario
Ontarians who have essential legal needs but can't afford a lawyer
https://www.probonoontario.org/

Human Rights Tribunal
613-995-1707

HALCO – HIV & AIDS Legal Clinic Ontario
416-340-7790

Advocacy Centre for Tenants Ontario
55 University Avenue Suite 1500,
Toronto M5J 2H7
416-597-5855
Toll-free: 1-866-245-4182

ARCH Disability Law Centre
55 University Ave Suite 1500,
Toronto M5J 2H7
416-482-8255
Toll-free: 1-866-482-2724

Justice for Children and Youth
55 University Ave Suite 1500,
Toronto M5J 2H7
416-920-1633

Chinese & Southeast Asian Legal Clinic
180 Dundas Street West Suite 1701,
Toronto M5G 1Z8
416-971-9674
Toll-free: 1-844-971-9674

South Asian Legal Clinic of Ontario
45 Sheppard Ave East Suite 106A,
Toronto M2N5W9
416-487-6371

Toronto Workers Health and Safety Legal Clinic
180 Dundas Street West Suite 2000,
PO Box 4, Toronto M5G 1Z8
416-971-8832

Toronto Police Services– Sex Crimes
40 College St., Toronto, ON , M5G 2J3
416-808-7474
General Inquiries: Call 311

## School Information

Toronto District School Board
416-397-3000
http://www.tdsb.on.ca/Contact-Us

Waterloo Region
District School Board
Welcome Centre for Newcomers:
Margaret Avenue Public School
325 Louisa Street
Kitchener ON N2H 5N1
519-576-3018
Web: Welcome Centre for Newcomers

Toronto Catholic
District School Board
416-222-8282

## Employment

ACCES Employment
Toronto Location
489 College Street, Suite 100
Toronto, ON, M6G 1A5
416-921-1800
Scarborough Location
2100 Ellesmere Road, Suite 250
Scarborough, ON, M1H 3B7
416-431-5326
North York Location
2001 Sheppard Avenue East, Suite 201, North York, ON, M2J 4Z8
416-443-9008

## Settlement Services

Arab Community Centre of Toronto
555 Burnhamthorpe Road, Suite 209
Etobicoke, Ontario M9C 2Y3
416-231-7746 ext. 236
Fax: (416) 231-4770
E-mail: info@acctonline.ca

COSTI Immigrant Services
416-244-0480 ext. 246

WoodGreen Community Services
416-645-6000 ext. 2100

Roofs for refugees
https://www.roofs4refugees.ca/
E-mail: hello@roofs4refugees.ca

FCJ REFUGEE CENTRE
208 Oakwood Ave, Toronto ON M6E 2V4
416-469-9754

Canada Newcomers and
Immigration Association
3660 Midland Avenue, Suite 300
Toronto, Ontario
647-345-3957

Settlement Assistance and
Family Support Services
1200 Markham Rd., Suite #214
Toronto, ON M1H 3C3
416-431-4847
Fax: (416) 431-7283
Email: reception@safss.org

